முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.31/2014 DW: 1 05.12.2023**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் **05** ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய சேகர் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | வயது | 51 |
| த/க. பெயர் | அழகப்பன் | தொழில் | கேபிள் ஆபரேட்டர் |
| ஜாதி | | கிராமம் | ராமநத்தம் |
| வட்டம் | | மாவட்டம் | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகளுக்கும் உங்களுக்கும் ஏதாவது விரோதமா என்றால் இல்லை. உங்கள் தாய் மாமன் பெயர் துரைசாமியா என்றால் எனக்கு தாய்மாமன் இல்லை. செ.துரைசாமி என்பவர் யார் என்றால் என் அப்பாவின் அத்தை பையன். ஆர்.டி.ராஜன் என்பவர் யார் என்றால் என் அத்தை மகன். ஆர்.சங்கர் என்பவர் யார் என்றால் என் அக்கா கணவர். அவர் மாநகர போக்குவரத்து கழகத்தில் பணியில் உள்ளார். ஆர்.ராமசாமி என்பவர் யார் என்றால் என் சிறிய தாத்தாவின் மகன். அவர் உள்ளாட்சி தலைவரா என்றால் இல்லை. ஏ.வெங்கடாசலம், ராமநத்தம் என்பவர் யார் என்றால் தெரியவில்லை. உங்கள் அப்பாவுடன் பிறந்தவர்கள் யார் என்றால் பெருமாள், கிருஷ்ணன், இளஞ்சேரன். நா.முத்துசாமி, ராமநத்தம் யார் என்றால் தெரியவில்லை.

2. உங்கள் அப்பா பெயர் அழகப்பன் என்றால் ஆமாம். உங்கள் கதவு எண்219 என்றால் சரிதான். வாதசாஆ 6 ல் உள்ள வரிசை எண்.767 புகைப்படம் உங்களுடையதுதான் என்றால் சரிதான். வாதசாஆ 6 ல் உங்கள் புகைப்படத்திற்கு கீழே உள்ள வரிசை எண்.770 புகைப்படம் உங்கள் சகோதரி அஞ்சுகம் என்பவருடையது என்றால் சரிதான். உங்கள் தாத்தா பெயர் என்னவென்றால் வெங்கடாசலம். வாதசாஆ 6 ல் உள்ள வரிசை எண்.768 புகைப்படம் உங்கள் அப்பா புகைப்படமா என்றால் சரிதான். தற்போதும் உங்கள் வீட்டு கதவுஎண்.219 என்றால் சரிதான். அதே கதவு இலக்கத்தில் வரிசை எண் 769 ல் அழகப்பன் மகன் செல்வன் என்று உள்ளதா என்றால் சரிதான். அது செல்வத்தின் புகைப்படமா

என்றால் சரிதான். பெரியம்மாள் உங்கள் அம்மாவா என்றால் ஆமாம். வாதசாஆ 5 ல் உங்கள் தகப்பனார் பெயரில் கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைதான் என்றால் சரிதா்ன. அதில் அழகப்பன், பெரியம்மாள், எனது பெயர், சேகர், செல்வம், அஞ்சுகம். என் தாய் வழி பாட்டி காசியம்மாள் ஆகியோர்கள் பெயர்கள் ஒன்றாவ வருவதால் குடும்ப அட்டையில் பெயர்கள் உள்ளது என்றால் சரிதான்.

3. 16.09.2017 ல் நீங்கள் ஒரு வாகன விபத்தில் அடிப்பட்டதால் வாகன விபத்து வழக்கு போட்டீர்களா என்றால் இல்லை. எனக்கு வாகன விபத்து ஏற்படவில்லை. 16.09.2017 வாகன விபத்தில் செல்வம் இறந்தாரா என்றால் ஆமாம். அந்த விபத்து தொடர்பாக நாரையூர் மாயவன் மகன் குணசேகர் புகார் கொடுத்தாரா என்றால் தெரியாது. அந்த வாகன விபத்துக்கு சம்மந்தமான வாகனம் உங்களுடையதா என்றால் இல்லை. உங்கள் தகப்பனார் மின் வாரிய துறையில் மின் பாதை ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றாரா என்றால் ஆமாம். உங்கள் அப்பா கையெழுத்து உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வாதசாஆ 8 ல் உள்ள கையெழுத்து என்னுடைய தகப்பனாருடையதா என்றால் ஆமாம். செல்வத்திற்கும் சத்யாவிற்கும் 10.02.2002 ல் திருமணம் நடந்ததா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வாதசாஆ 7 ஆனது திருமண பத்திரிக்கை என்றால் சரிதான்.

4. ராமநத்தத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளதா என்றால் உள்ளது. சாதசாஆ 1 ல் உள்ளது என் அப்பாவின் கையெழுத்து என்றால் ஆமாம். செல்வத்தை உங்கள் அப்பாதான் ராமநத்தத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சேர்த்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வாதசாஆ 11 ல் செல்வத்திற்கு 16.09.2017 ல் காலமாகும்போது அவருக்கு அவரது மனைவி அவரது மகன் மற்றும் அவரது அப்பாதான் வாரிசுகள் என்று வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றால் தெரியாது, என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறுதான் உள்ளது என்றால் சரிதான். அதில் அழகப்பன் குமாரர் செல்வம் என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. உங்கள் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரையில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அழகப்ப படையாச்சிக்கு பாத்தியமான சொத்துக்கள் என்றால் சரிதான். அழகப்ப படையாச்சி காலமாவதற்கு முன்பு யாதொரு ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். அதனால் அழகப்ப படையாச்சி

சொத்துக்களில் அவரது குமாரர்கள், குமாரத்திகள் அனைவருக்கும் சம பாகம் உண்டு என்றால் சரிதான். வழக்கில் கண்ட சொத்துக்கள் தவிர அழகப்ப படையாச்சிக்கு வேறொரு சொத்தும் இல்லை என்றால் சரிதான்.

6. நீங்கள் 4ம் எதிர்வாதிக்கு கிரயம் கொடுத்த காலத்தில் செல்வம் உயிரோடு இருந்தாரா என்றால் இல்லை. 12.01.2001ல் அப்போது பெரியம்மாள் இருந்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கு போடுவதற்கு முன்பாக சத்யா பாகம் கேட்டு நோட்டீஸ் கொடுத்ததற்கு நீங்கள் பதில் போட்டீர்களா என்றால் பதில் கொடுக்கவில்லை. நீங்கள் உங்கள் இளைய சகோதரர் செல்வத்தின் பாகத்தை மறுக்கவேண்டும் என்பதால் எதிர் வழக்குரையில் செல்வத்தைப் பற்றி தவறாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் அப்பாவிற்கு பிறந்த செல்வத்திற்கு அழகப்ப படையாச்சி சொத்தில் பாகம் உண்டு என்றாலும் அதை மறுக்க உங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. அவரது அகால மரணத்தால் அவரது பாகத்தை நீங்கள் மறுக்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவாப்படி வாதிக்கு பரிகாரம் கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi.